## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – திருமதி.ச.கௌசல்யாபாய், க/பெ. காலஞ்சென்ற எங்கோபராவ் – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**

**பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு**

**அரசாணை (3டி) எண்.33** **நாள் 11.06.2024.**
**குரோதி வருடம், வைகாசி–30,**
**திருவள்ளுவர் ஆண்டு 2055.**

**படிக்கப்பட்டது:**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.4/ 2600588/2022, நாள் 04.03.2023.

******

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவரும், இந்திய இராணுவத்தில் படைவீரராக பணியாற்றி பணியிடையே 15.08.2010 அன்று காலஞ்சென்ற எங்கோபராவ் என்பவரின் மனைவி திருமதி.ச.கௌசல்யாபாய் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 28.07.2011 அன்று விண்ணப்பித்துள்ளார். தனியர் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த 28.07.2011 நாளில் 25 வயதும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட 10.11.2021 நாளில் 35 வயதினை நிறைவு செய்துள்ளதோடு, 10–ஆம் வகுப்பு தேர்ச்சி (மார்ச்–2002) பெற்றுள்ளார். எனவே, திருமதி.ச.கௌசல்யாபாய் என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறிய நிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 10.11.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துரு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், அதனை ஏற்று, திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவரும், இந்திய இராணுவத்தில் படைவீரராக

//த.பி.பா//

பணியாற்றி பணியிடையே 15.08.2010 அன்று காலஞ்சென்ற எங்கோபராவ் மனைவி திருமதி.ச.கௌசல்யாபாய், என்பவர் பணி நியமன நாளில் 30 வயதினைக் கடந்துள்ளதால், தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளில், விதி 28-ஐ தளர்வு செய்து, தனியர் திருமதி.ச.கௌசல்யாபாய் என்பவரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 10.11.2021 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை மனித வள மேலாண்மைத் துறையிடம் 29.09.2023 நாளில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் மாவட்டம்.
திருமதி.ச.கௌசல்யாபாய், இளநிலை வருவாய் ஆய்வாளர்.
(திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

**நகல்**

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

12/6/2024

**பிரிவு அலுவலர்.**

12/6/24